بسم الله الرحمن الرحيم

:ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 1.08.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

Summary of the Friday Sermon - 1, August 2014 (Tamil)

# வெறுக்கத்தக்க குஜ்ரான்வாலா தாக்குதல்

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் சூரத்துல் புரூஜின் முதல் 12 வசனங்களை ஓதி அதன் பொருளை கூறினார்கள்

பொருள்: ``**கிரக நிலைகள் கொண்ட வானத்தை நான் சான்றாகக் காட்டுகிறேன். வாக்களிக்கப்பட்ட நாளையும், சாட்சி கூறுபவரையும், சாட்சி கூறப்படுபவரையும் (நான் சான்றாகக் காட்டுகின்றேன்). அகழ்களுக்குரியவர்கள் விபத்தில் அழிக்கப்பட்டனர்.(அதாவது) எரிபொருள் ஊட்டபட்டுள்ள நெருப்பிற்குரியவர்கள். அவர்கள் அதன் அருகில் உட்கார்ந்திருந்த நேரத்தில், அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களுக்குச் செய்ததற்கு அவர்களே சாட்சிகளாக இருந்தனர். வல்லவனும் மிகுந்த புகழுக்குரிவனுமாகிய அல்லாஹ்விடம் அவர்கள் நம்பிக்கை கொண்ட ஒரே காரணத்திற்காகவே, அவர்களிடம் அவர்கள் வெறுப்பு கொண்டனர். வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அவனுக்கே உரியதாகும். அல்லாஹ் எல்லாவற்றிற்கும் சாட்சியாவான். நம்பிக்கை கொண்ட ஆண்களையும், நம்பிக்கை கொண்ட பெண்களையும் துன்புறுத்தி பின்னர் கழிவிரக்கம் கொள்ளாதவர்களுக்கு, நிச்சயமாக நரக தண்டனையும் உண்டு; எச்சரிக்கக்கூடிய தண்டனையும் அவர்களுக்கு உண்டு. ஆனால் நம்பிக்கைகொண்டு நச்செயல் செய்பவர்களுக்கு தோட்டங்கள் உண்டு., அவற்றிற்கிடையே ஆறுகள் ஓடும். இதுவே மாபெரும் வெற்றியாகும்,,**(சூரத்துல் புரூஜ: 1–12)

நான் ஓதிய திருக்குர்ஆன் வசனங்கள் குஜ்ரான் வாலாவில் அஹ்மதிகளோடு நடந்த அந்த சம்பவத்தை படம்பிடித்துக் காட்டுகின்றது. இது அஹ்மதிய்யத் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவூது (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு எப்படிப்பட்ட ஆதாரம் என்றால் நீதியை விரும்பக்கூடிய முஸ்லிம்கள் சூரத்துல் புரூஜை ஆராய்ந்து பார்த்தால் அஹ்மதிகளின்மீது இழைக்கப்படும் அநீதிகள் மற்றும் கொடுமைகள் பற்றி தங்களது ஆலிம்கள், தங்களது தலைவர்கள், தங்களது அரசாங்கங்கள் அஹ்மதிய்யத்திற்கு எதிராக எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்றும் மற்றும் எவ்வாறு துக்கம் கொடுக்கிறார்கள் என்ற உண்மை அவர்களுக்குத் தெரிந்து விடும். மேலும் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவூது (அலை) அவர்களின் மீது நம்பிக்கை கொள்ளக்கூடும். மேலும் அநீதியிழைக்கக்கூடிவர்கள் மற்றும் அவர்களின் கூட்டத்தினரும் இழைக்ககூடிய அநீதிகளின் அங்கமாகவும் இருக்கமாட்டார்கள். ஆனால் இறைவனின் வார்த்தைகளை புரிவதற்கும்கூட இறைவனால் அனுப்பட்டவரின் தேவை இருக்கிறது. ஆனால் இவர்களின் நிலைமை எப்படி இருக்கிறது என்றால் இவர்கள் அவரின் விஷயங்களை முற்றிலும் கேட்க விரும்புவதில்லை. இதன் காரணமாக அநீதிகளில் முன்னேறிக்கொண்டே செல்கின்றனர். இங்கு நான் இந்த வசனங்களைப்பற்றி சுருக்கமாக விளக்கி விடுகின்றேன். இங்கு சான்றாகக் கூறப்பட்டுள்ள கிரக நிலைகள் கொண்ட வானங்கள் என்பதன் பொருள் வானியல் அறிஞர்கள் கூறுகின்ற 12கிரக நிலைகள் மற்றும் நட்சத்திரங்கள் பற்றியதாகும். இங்கு இஸ்லாத்தின் வறலாற்றோடு ஆழிய தொடர்புள்ள அந்த ஆன்மீக கிரக நிலைகள் உவமைவடிவில் கூறப்பட்டுள்ளன. மேலும் இதன் பொருள் இஸ்லாத்தின் வானத்தில் சூரியன் மறைந்த பிறகு தனது ஒளியால் ஒளிறிய அல்லது ஒருசில காலத்திற்கு ஒளிகொடுத்துக்கொண்டிருந்த 12 முஜத்தித்கள் (மார்க்கத்தை புதுப்பிக்கக்கூடிவர்கள்) ஆவார்கள். இந்த காலம் தொடர்பா ஹதீஸ்களிலும் வந்துள்ளது. மேலும் முந்தைய ஆலிம்களும் கூறியுள்ளார்கள். இதுவியப்பிற்குரிதாகும் அதாவது 12 நூற்றாண்டுகளில் 12 முறைஇஸ்லாத்தின் இருண்ட காலத்தில் ஒளிக்கதிர்களைப் பரப்புவதற்காக அல்லாஹ்வால் அனுப்பட்டவர்களை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் இறைவன் கூறுகிறான்; வல் யவ்மில் மவ்வூது. அதாவது வாக்களிக்கப்பட்ட நாளையும் சான்றாகக் காட்டியுள்ளான். வாக்குறுதிக்கேற்ப 13வது நூற்றாண்டில் அல்லாஹ் வாக்களிக்கப்பட்டவரை அனுப்பியபோது அவரை மறுத்துவிட்டார்கள். பிறகு அல்லாஹ் கூறுகின்றான், அந்த வாக்களிக்கபட்ட றாளில் அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் சந்தேகமின்றி இஸ்லாம் மீண்டும் உயிர்பெறும். இஸ்லாத்தின் புதிய வாழ்விற்கான காலம் ஆரம்பமாகும். ஆனால் அதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக்கொள்ளக்கூடிய நம்பிக்கையாளர்களுக்கு மாபெரும் தியாகங்கள் செய்ய நேரிடும். அல்லாஹ் கூறுகிறான்; அகழ்களுக்குரியவர்கள் விபத்தில் அழிக்கப்பட்டனர். ``***அன்னாரி ஸாத்தில் வகூது,,*** அதாவது எரிபொருள் ஊட்டப்பட்டுள்ள நெருப்பிற்குரியவர்கள். ``***இஸ்ஹும் அலைஹா குவூத்,,*** அதாவது அவர்கள் அதன் அருகில் உட்கார்ந்திருந்த நேரத்தில். இங்கு எதிரிகள் பற்றி படம்பிடித்துக் கூறப்பட்டுள்ளது. அதாவது இந்த எதிரிகள் எப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள் என்றால் நெருப்பூட்டிய பிறகு அதன் அருகே அமர்திருப்பார்கள். இது நிச்சயமாக நடக்கும். ஆனால் இறுதியில் எதிரிகள் தமது தீய முடிவை எய்துவார்கள். அவர்கள் அழிக்கப்படுவார்கள். எவ்வாறிருப்பினும் நம்பிக்கையாளர்கள் நீண்டகாலம் இன்னல்களுக்கும் கடுமையான அநீதிகளுக்கும் ஆளாகவேண்டி வரும். இஸ்லாத்தின் முன்னேற்றம் நம்மிடம் சிலவற்றை எதிர்பார்க்கின்றது. அந்த எதிர்பார்ப்பு மரணமாகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவூது(அலை) அவர்கள் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். இந்த வசனங்களிலும் இதுவே

கூறப்பட்டுள்ளது. அதாவது எரிபொருள் ஊட்டப்பட நெருப்பு எங்களுக்கு எதிராக மூட்டப்படும். அந்த நெருப்பில் மீண்டும் மீண்டும் எரிபோருள் ஊட்டப்படும். இந்த நெருப்பை மூட்டக்கூடியவர்கள் அதன் அருகே அமர்ந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பர். இப்படிப்பட்ட ஏற்பாடு செய்தவர்கள் அகழ்கள் தோண்டி நம்பிக்கையாளர்களை எல்லாப்பக்கங்களிலிருந்தும் சூழ்ந்து நெருப்பிடுவார்கள். ஆனால் அல்லாஹ் ஆரம்பத்திலேயே கூறிவிட்டான் அதாவது நிச்சயமாக நெருப்பின் கஷ்டங்களை கடந்துசெல்ல நேரிடும். ஆனால் எல்லாப்பக்ககங்களிலிருந்தும் சூழ்ந்து நம்பிக்கையாளர்களை நெருப்பிலிட முயற்சி செய்பவர்களே அழிக்கப்படுவார்கள். இந்த சம்பவத்தின் வீடியோ காட்சிகளிலிருந்தும் வெட்கக்கேட்டின் எல்லையைக் கடந்துவிட்டார்கள் என்பது அந்த அநீதியாளர்களின் முகங்களிலிருந்து தெளிவாகிறது. அவர்களுடைய செயல்களிலிருந்து அவர்களின் முழக்கங்களிலிந்தும் அவர்களின் பேச்சுக்களிலிருந்தும் இது தெரிகிறது. எவ்வாறிருப்பினும் இதுஅவர்களின் எதிர்ப்பின் எல்லையாகும். இவை அணைத்தும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரில் நடக்கின்றன என்பது மிகவும் வருத்தத்திற்குரிய விஷயமாகும். ``***இஸ்கும் அலைஹா குஊத்,,*** யிலிருந்து தெரியவருவது என்னவென்றால் அவர்கள் நிரந்தரமாக அமர்திருப்பார்கள். தண்டனை அளிக்கக்கூடிய திட்டங்களைத் தீட்டுவதற்கு முயற்சி செய்வார்கள். குஊத் என்பதன் பொருள் அமர்வதாகும். மேலும் ஏதேனும் ஒன்றன்மீது அமர்ந்தே இருப்பதாகும். இதுவும் ஒரு மொழிநடையாகும், அதாவது நீண்டகாலம்வரை ஏதேனும் பணியை தொடர்ந்து செய்வதாகும்.

ஆக இவர்களின் பொய்யான ஏமாற்றுவேலைகள் மற்றும் இன்னல்களின் தொடர் ஒருவேளை நீளலாம். மாறாக நீண்டுகொண்டே செலலும். ஏனென்றால் எதிரிகள் உருவாகிக்கொண்டே இருப்பார்கள். அது நடந்துகொண்டுதான் இருக்கிறது. அவர்கள் பொய்யான முறையில்தான் நடக்கிறார்கள் என்பது அவர்களின் ஆலிம்களுக்கும் தெரியும். பொய்யைப் புனைவதைத் தவிர ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை)அவர்களின் வாதத்தை ரத்துசெய்யக் கூடிய எந்தவொரு ஆதாரமும் அவர்களிடம் இல்லை. இன்றைய நாட்களில் பாகிஸ்தானின் ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு தெருக்களிலும் பொய்யினால் ஆன அஹ்மதிய்யத்திற்கு எதிரான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அரசாங்க கட்டிடங்களிலும்கூட, எந்தளவிற்கு என்றால் உயர்நீதிமன்றத்தின் கட்டிடங்களிலிலும் ஒட்டப்பட்டுள்ளன. எந்தளவிற்கு தவறான விஷயங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களோடுமோ அல்லது ஜமாஅத்தின் கொள்கைகளோடுமோ இணைத்துக் கூறுகிறார்களோ அதற்கு எல்லையே இல்லை. மேலும் இப்படிப்பட்ட விஷயங்களைக் கூறி மக்களை கோபமூட்டுகின்றனர். இவைகள் எப்படிப்பட்டதென்றால் இவைகளுக்கும் ஜமாஅத்தின் கொள்கைகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை. அவர்களின் இந்த எதிர்ப்பின் காரணமாக ஜமாஅத்திற்கு ஆறுதல் வழங்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை)அவர்கள் கூறுகிறார்கள்;

``இறைவன் உங்களை வீணாக்கிவிடுவான் என்று எண்ணாதீர்கள். நீங்கள் இறைவனின் கையால் பூமியில் விதைக்கப்பட்ட விதையாவீர்கள். இறைவன் கூறுகிறான் இந்த விதை வளரும், பூக்கும், எல்லாப்பக்கங்களிலும் இதன்கிளைகள் பரவும் மேலும் மிகப்பெரிய மரமாகிவிடும். ஆக இறைவனின் விஷயங்களின் மீது நம்பிக்கை வைத்து மேலும் இடையில் வரக்கூடிய சோதனைகளைக்கண்டு அஞ்சாதவர் வாழ்துக்குரியவராவார். ஆக சந்தேகமின்றி தியாகங்கள் செய்யவேண்டி வரும். ஆனால் இந்த ஜமாஅத் அல்லாஹ்வால் நடப்பட்ட மரமாகும். இது அல்லாஹ்வின் அருளால் வளர்ந்தும், பூத்தும் கனி தந்துகொண்டும் இருக்கும். இன்ஷா அல்லாஹ். மேலும் நெருப்பு மூட்டக்கூடியவர்கள் தாங்களே இந்த நெருப்பில் எரியக்காண்பார்கள். அல்லது அல்லாஹ் அவர்களை அழிப்பதற்கான வேறு ஏதேனும் ஏற்பாடுகளைச் செய்வான். ``***குதில அஸ்ஹாபுல் உக்தூத்,,*** அதாவது அகழ்கமுக்குரியவர்கள் விபத்தில் அழிக்கப்பட்டனர் என்பது ஜமாஅத்திற்கு சாதகமாக பூர்த்தியாகிக் கொண்டிருக்கக்கூடிய அல்லது பூர்தியாகிக்கொண்டேயிருக்கக்கூடிய ஒரு முன்னறிவிப்பாகும். இவர்கள் அழிந்துகொண்டேயிருப்பார்கள். ஆக இந்த முன்னறிவிப்பு அந்த அநீதியாளர்களோடு மீண்டும் மீண்டும் பூர்த்தியாகிக் கொண்டேயிருக்கும். பிறகு இவர்கள் தங்களுடைய அநீதிகளிலிருந்து விலகியிருக்க மாட்டார்கள். மீண்டும் மீண்டும் அநீதியிழைத்துக் கொண்டேயிருப்பார்கள். ஆனால் இறைவனால் நடப்பட்ட அஹ்மதிய்யத் எனும் மரத்தின் செடி வளர்ந்து கொண்டேயிருக்கும். இன்ஷா அல்லாஹ். 125வருட அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வறலாறு மற்றும் நடந்து கொண்டிருக்கும் முன்னேற்றங்களிலிருந்து இது மனிதனின் வேலையல்ல மாறாக இறைவனின் வேலையாகும் என்ற பாடத்தை இவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். மேலும் இறைவனுடைய பணியில் இடையூறுகளைச் செய்து தடுக்க முயற்சி செய்து இறைவனின் வெறுப்பைத் தவிர வேறு எதையும் இவர்கள் பெறவில்லை. அல்லாஹ் இவர்களின் முடிவை எவ்வாறு வைத்துள்ளான் என்பதைக்கூட இவர்கள் அறிவதில்லை. அல்லாஹ் கூறுகின்றான்: ``***இன்னல்லதீன ஃபதலுல் முஃமீன வல் முஃமினாதி ஸும்ம லம் யதூபு ஃபலஹும் அஸாபு ஜஹன்னம வலஹும் அஸாபுல் ஹரீக்,,*** ஆதவது நம்பிக்கைக் கொண்ட ஆண்களையும் நம்பிக்கைக் கொண்ட பெண்களையும் துன்புறுத்தி பின்னர் கழிவிரக்கம் கொள்ளாதவர்களுக்கு நிச்சயமாக நரக தண்டனையும் உண்டு. எரிக்கக்கூடிய தண்டனையும் அவர்களுக்கு உண்டு. அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக நம்பிக்கை கொண்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தண்டனை கொடுக்கக்கூடியவர்கள் அல்லது முயற்சி செய்யக்கூடியவர்கள் அவர்களுக்கு எதிராக நெருப்பை மூட்டுகின்றனர். அதிலிருந்து காப்பாற்றுவதற்கு யாரும் வராத அளவிற்கு அதை பாதுகாக்கக் கூடியவர்களுக்கு நரக தண்டனை உண்டு.

ஆக எனது கம்பீரத்தையும் ஏகத்துவத்தையும் மற்றும் எனது இறுதி நபியின் கண்ணியத்தையும் மரியாதையும் நிலைநாட்டுவதற்காக இரவு பகலாக அயராது உழைக்கக்கூடியவர்களை குழப்பம் மற்றும் கஷ்டத்தில் ஆழ்த்தக்கூடியவர்களையும், அவர்களின் உடல்களை எரிக்கக்கூடியவர்களையும் அல்லது அவர்களது வீடுகளை எரிக்கக்கூடியவர்களையிம் அல்லது அவர்களின் மீது பொய்யைப்புனைந்து அவர்களின் உள்ளத்தை புண்படுத்து பவர்களையும் நான் விடமாட்டேன் எனவும் அவர்கள் பாவமன்னிப்பு கோரினால் தவிர நிச்சயமாக அவர்களை நான் நரக நெருப்பில் போடுவேன் என்றும் அல்லாஹ் கூறுகிறான். அல்லாஹ் பாவமன்னிப்பை ஏற்றுக்கொள்கிறான் மற்றும்

மன்னிக்கவும் செய்கிறான். எவ்வாறு இருப்பினும் அந்த அநீயிழைக்கக்கூடியவர்கள் மற்றும் தீ மூட்டக்கூடியவர்களின் முடிவு என்னவாக இருக்கும் என்பது தொடர்பாக அல்லாஹ் நமக்கு கூறியுள்ளான். மேலும் அத்தோடு நம்பிக்கைக் கொண்டவர்களுக்கு அவர்களின் தியாகங்களின் பிரதிபலனாக அருள்களை வழங்குவதாக ஆறுதல் கூறியவாறு கூறுகின்றான்; ``***இன்னல்லதீன ஆமனு வ அமிலுஸ்ஸாலிஹாதி லஹும் ஜன்னாத்துன் தஜ்ரீ மின் தஹ்திஹல் அன்ஹாரு ஸாலிகல் ஃபவ்ஸுல் கபீர்,,*** ஆதவதுநம்பிக்கைக்கொண்டு, நற்செயல்கள் செய்பவர்களுக்கு நிச்சயமாக தோட்டங்கள் உண்டு. அவற்றுக்கிடையே ஆறுகள் ஓடும். இதுவே மாபெரும் வெற்றியாகும். எதிரிகள் நெருப்பின் தொடரை ஆரம்பித்துவிட்டு அது அணையாமல் இருக்க அதனை கண்காணித்தும் வந்தார்கள். ஆனால் இப்படிப்பட்ட அநீதிக்கு ஆளானவர்களுக்கு அதன் கிளைகள் ஒன்றோடொன்று இணைந்துள்ள தோட்டத்தையுடைய, குளிர்ந்த நிழலுடைய, அதன்கீழ் நதிகள் ஓடக்கூடிய சொர்க்கத்தை ஏற்பாடு செய்துள்ளேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஆக நெருப்பு மூட்டக்கூடியவர்களின் முடிவிற்கும் மற்றும் அநீதிக்குள்ளாக்கப்பட்டவர்கள், நம்பிக்கையாளர்களின் முடிவிற்கும் இடையே தெளிவான வித்தியாசம் உள்ளது. நாம் இந் அநீதிகளுக்கு எதிராக உதவி கோருவதற்கு முன்பும் அல்லாஹ்வின் பக்கமே குனிந்தோம். இன்றும் அவன்முன்னேயே குனிகின்றோம்.

ஆக எல்லாவகையிலும் முடிவுகள் அல்லாஹ்வின் உதவிக்கான நற்செய்திகளை வழங்குகிறது என்றால் இதன் பொருள் ஒவ்வொரு விஷயத்திற்கும் பல்வேறுகோணங்கள் இருக்கின்றன. வெளிப்படையானவையும், மறைமுகமானவையும், ஆனால் அல்லாஹ் கூறியதுபோன்று நெருப்பு மூட்டியதன் விளைவாக நெருப்பு மூட்டக்கூடியவர்களுக்கு எரியும் தண்டனையும் உள்ளது. மேலும் நரக தண்டனையும் உள்ளது. ஆனால் நெருப்பின் இழப்பிற்கு ஆழான நம்பிக்கையாளர்களுக்கு குளிர்ந்த நிழல் தரக்கூடிய சொர்க்கங்கள் உள்ளன. ஆக நமது இந்த ஷஹீதுகள் அல்லாஹ்வின் சொர்கத்தில் வலம் வந்துகொண்டிருக்கிறார்கள். அனைத்து தியாகம் செய்யக்கூடியவர்கள், பெண் குழந்தைகளாகவும், பெண்மணியாகவும் இருப்பது அஹ்மதிய்யத்தின் வறலாற்றின் இதுவே முதல் சந்தர்ப்பமாகும். எந்த ஆணும் இதில் இல்லை. ஆக இந்த அப்பாவிகளின் தியாகங்கள் அந்த நரகத்தை அருகில் கொண்டுவருகின்றன. மேலும் இன்ஷா அல்லாஹ் இது ஒருபோதும் வீண்போகாது. இந்த சம்பவம் தொடர்பான அறிக்கையின் ஒரு சில விபரங்களை உங்கள்முன் எடுத்துவைக்கின்றேன்.

இந்த ஷஹீதுகளில் ஷஹீதான பெண்மணியின் பெயர் புஷ்ரா பேகம் ஆகும். இவர் மதிப்பிற்குரிய மர்ஹூம் முனீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவியாவார்கள். பெண்பிள்ளைகளில் ஒருவர் மதிப்பிற்குரிய முஹம்மது பூட்டா சாஹிப் அவர்களின் ஹிரா தபஸ்ஸும் மற்றும் இன்னொரு மகள் காயினாத் தபஸ்ஸும் ஆவார்கள். இந்த சம்பவத்தை அனைவரும் கேட்டிருப்பீர்கள். பல்வேறு இடங்களிலிருந்தும் செய்திகள் வந்திருக்கும். இருப்பினும் நானும் கூறிவிடுகிறேன். அதாவது ஜூலை27,2014 அன்று பாகிஸ்தானின் குஜ்ரான் வாலா நகரின் கச்சி பம்ப்வாலி அரஃபாத் காலனியில் அஹ்மதிய்யத்தின் எதிரிகள் அஹ்மதி சகோதரர்களின் வீடுகளில் தாக்குதல் நடத்தினர். வீட்டிற்கு நெருப்பு வைத்ததன் காரணமாக மர்ஹூம் முனீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவி புஷ்ரா பேகம் சாஹிபா வயது 55 மற்றும் முஹம்மது பூட்டா சாஹிப் அவர்களின் இரு சிறுவயது மகள்கள், ஹிரா தபஸ்ஸும் வயது 6, காயினா தபஸ்ஸும் வயது 8 மாதம் இவர்கள் மூவர்களும் நான் கூறியது போன்று ஷஹீத் ஆனார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். சம்பவம் நடந்த அன்று ஷஹீது மர்ஹூமா அவர்களின் மகன் மதிப்பிற்குரிய முஹம்மது அஹ்மது அவர்கள் மருந்து வாங்குவதற்காக அருகில் இருந்த கிளீனிக்கிற்கு சென்றார்கள். அங்கு அவர்களின் சிறியதந்தையின் மகன் வகாஸ் அஹ்மத் அவர்களை ஒருசிலர் தடுத்து வைத்திருப்பதைக் கண்டார்கள். என்னவிஷயம் என்று கேட்டற்கு அவர்களோடும் தகாத வார்த்தைகளால் பேசினார்கள் மேலும் உங்களுடைய ஒரு இளைஞன் ஃபேஸ் புக்கில் கஅபத்துல்லாஹ்வின் படத்தை இழிவு படுத்தியுள்ளான் என்றும் குற்றம் சாட்டினர். நவூதுபில்லாஹ். அதற்கு அவர்கள் இவ்வாறு ஒருபோதும் எங்களால் எண்ணிக்கூட பார்க்கமுடியாது எனக் கூறினார்கள். எவ்வாறு இருப்பினும் அந்த சமயத்தில் இந்தப் பிரச்சனை முடிந்துவிட்டது. சற்று நேரத்திற்குப்பிறகு எந்த கிளீனிக்கிற்கு முன்பாக இந்த சம்பவம் நடந்ததோ அதன் டாக்டர் அவர்கள் முஹம்மது புட்டா சாஹிப் மற்றும் ஃபஸ்ல் அஹ்மது சாஹிப் ஆகியோர்களுக்கு ஃபோன் செய்து இங்கு மக்கள் ஒன்று கூடுகிறார்கள் என்றும் மேலும் உங்கள் வீடுகளில் தாக்குதல் நடத்தும் நோக்குடன் பேரணியாக வந்துகொண்டிருக்கின்றனர் என்றும் கூறினார். இதேப்போல் வியாபாரிகள் சங்கத்திலிருந்தும் மக்கள் ஒன்றுகூடுங்கள் மற்றும் கடைகளை அடையுங்கள் என்று அறிவிப்பு செய்யப்பட்டது. இது முறையான ஒரு பிளானாக இருந்தது. இதுபற்றிய செய்தி கிடைத்ததுமே 15 அஹ்மதி வீடுகளின் ஆண்களும் பெண்களும் தங்களுடைய வீடுகளிலிருந்து வெளியேறிவிட்டார்கள். ஆனால் முஹம்மது பூட்டா சாஹிப் மற்றும் இன்னும் இரண்டு வீட்டினர் முஹம்மது அஷ்ரஃப் சாஹிப் சதர் ஜமாஅத் மற்றும் அவரின் சகோரரின் குடும்பத்தினர் வீட்டிலேயே இருந்தனர். ஏறக்குறைய இரவு 8.30 மணியளவில் ஆர்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தினர். மேலும் அஹ்மதி வீடுகளின் அருகில் முழக்கமிட்டனர். மேலும் ஃபயரிங்கும் செய்தனர். மேலும் அத்தோடு வீடுகளின் மூடியிருந்த கதவுகளை உடைக்க ஆரம்பித்துவிட்டனர். இவர்கள் திட்டமிட்டு எல்லாப் பக்ககங்களிலிருந்தும் தாக்குதல் நடத்தனர். இந்த சம்பவத்திற்கு சதர் ஜமாஅத் அவர்கள் உடனடியாக பீப்பிள்ஸ் காலனியின் S.H.Oவிற்கு தெரியப்படுத்தினார்கள். அதற்கு அவர் நான் போலீஸ் படையுடன் சம்பவ இடத்திலேயே உள்ளேன். மேலும் தாக்குதல் நடத்தியவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அவர்களை அழைத்துச் செல்கின்றேன் என்று கூறினார். எவ்வாறிருப்பினும் உண்மை என்னவென்றால் அவர் அவர்களை அழைத்துச் செல்லவில்லை. இதற்கிடையே மீண்டும் தாக்குதல் நடத்தினர். சுத்தியல் கடப்பாரை மற்றும் மற்ற ஆயுதங்களும் அவர்களிடம் இருந்தன. அவர்களோடு இன்னொரு

கூட்டமும் இணைந்தது. வந்தவுடனேயே அவர்கள் முதலில் மின்சார மீட்டரை உடைத்தார்கள். பிறகு வயர்களை வெட்டினார்கள். எவ்வாறிருப்பினும் மிகமோசமான நிலைமையின் காரணமாக சதர் சாஹிப் மற்றும் அவரின் சகோதரரின் குடும்பத்தின் மாடிவழியாக பக்கத்திலுள்ள அஹ்மதியல்லாத ஒரு அஹ்லே குர்ஆன் வீட்டில் தஞ்சமடைந்தனர். எவ்வாறிருப்பினும் அவர் நல்ல மனிதராக இருந்தார். அவர் அடைக்கலம் கொடுத்தார். ஆனால் முஹம்மது பூட்டா சாஹிப் மற்றும் அவரது சகோதரர் ஃபஸ்ல் அஹமது சாஹிப் அவர்களின் குடும்பத்தினர் அவர்களுடைய வீட்டின் மாடியிலுள்ள ஒரு அறையில் சிக்கிக் கொண்டனர். இதற்கிடையில் ஆர்பாட்டக்காரர்கள் வீட்டிற்குள் நுழைந்து மேல்மாடியில் 11 பெண்களும் குழந்தைகளும் அடைபட்டிருந்த அந்த அறையின் கதவை உடைக்க முயன்றனர். கதவு உடையாததால் அந்த கதவு திறக்காத வண்ணம் அதை சீல்வைத்துவிட்டனர். கதவுகள் மற்றும் அறையின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்தனர். பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் வேறுசில பொருட்களையும் ஒன்றுசேர்த்து கதவு மற்றும் ஜன்னல்களுக்கு வெளியே நெருப்பிட்டார்கள். இந்த நெருப்பின் விஷப்புகை கதவின் கீழ்பகுதி மற்றும் உடைந்த ஜன்னல்கள் வழியாக முழு அறையிலும் நிரம்பிவிட்டது. அதற்குப்பிறகு நெருப்பு மூட்டிய இந்த அநியாயக்கார்கள் ஜன்னல் வழியாக ஏளனம் செய்தவாறு விடைகொடுப்பதைப்போல் கையசைத்துவிட்டு சென்றுவிட்டனர். அதில் 11 அஹ்மதி பெண்களும் குழந்தைகளும் அடைபட்டிருந்தனர். புகையின் காரணமாக புஷ்ரா பேகம் சாஹிபா மற்றும் அவர்களின் இரு பேத்திகள் ஹிரா தபஸ்ஸும் மற்றும் காயினாத் தபஸ்ஸும் ஆகியோர் மூச்சு முட்டியதன் காரணமாக ஷஹீத் ஆனார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். தாக்குதல் நடத்தியவர்கள் எந்த அளவிற்கு தீவிரமாக இருந்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் காயமானவர்களை தூக்குவதற்கும் நெருப்பை அனைப்பதற்கும் வந்த மருத்துவமனையின் ஆம்புலன்ஸ் மற்றும் இன்னொரு எமர்ஜென்ஸி ஆம்புலன்ஸ் மற்றும் தீயணைப்பு வண்டிகளையும் சம்பவ இடத்திலிருந்து விரட்டிவிட்டனர். மேலும் அனைத்து கடுமையை விரும்பக்கூடியவர்களும் நெருப்பை மூட்டிக்கொண்டிருந்தனர். அத்தோடு நடனமாடிக்கொண்டும் இருந்தனர். போலீஸ் இந்த அனைத்தையும் சம்பவ இடத்தில் அமைதியாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. எவ்வகையிலும் அந்தக் கொடியவர்களை தடுப்பதற்கு முயற்சி செய்யவில்லை.

இந்த சம்பவத்தில் ஷஹீதான மதிப்பிற்குரிய புஷ்ரா பேகம் சாஹிபா ஷஹீது அவர்களின் குடும்பத்தில் அவர்களின் பாட்டனார் லோதினங்களைச் சார்ந்த மதிப்பிற்குரிய மியான் ஷஹாபுத்தீன் சாஹிப் அவர்களின் மூலமாக அஹ்மதிய்யத் கிடைத்தது. இவர்களுக்கு இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் காலத்தில் ஜமாஅத்தில் இணையும் நற்பாக்கியம் கிடைத்தது. ஷஹீத் மர்ஹூமாவின் திருமணம் முனீர் அஹ்மது சாஹிபோடு குஜ்ரான்வாலாவில் நடந்தது. 1976 ல் இவர்கள் இங்கு வந்தார்கள். இவர்களுடய கணவர் முனீர் அஹ்மது சாஹிப் அவர்களும் 6 மாதங்களுக்கு முன்பு வஃபாத் ஆனார்கள். மற்ற ஷஹீதுகள் ஹிரா தபஸ்ஸும் மற்றும் காயினாத் தபஸ்ஸும் ஆகியோரும் இவருடைய பேத்திகளாவார்கள். ஷஹீத் மர்ஹூமா அல்லாஹ்வின் அருளால் ஐவேளை தொழக்கூடிய, திருக்குர்ஆன் ஓதக்கூடிய, மிகவும் கருணையுள்ள, விருந்து உபசரிக்கக்கூடிய உயர் நல்லொழுக்கத்தை உடையவராக விளங்கினார்கள். விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் உணவு தானியங்களிடுவது இவர்களுடைய தினசரி செயலாகும். எந்தவொரு பொறுப்பிலும் இல்லாமலிருந்தும்கூட எங்கெல்லாம் ஜமாஅத் தொண்டின் தேவை உள்ளதோ அங்கு முன்னிற்பார்கள். ஷஹீதாவதற்கு ஒரு நாளைக்கு முன் அந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கு நோன்பு திறக்க ஏற்பாடு செய்தார்கள். ஷஹீதாகிய இவர்களுடை ஒரு பேத்தி ஹிரா தபஸ்ஸும் வீடு வீடாக சென்று இஃப்தாரி விளம்பினார்கள்.

குஜ்ரான்வாலாவின் அமீர் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்; முழு குடும்பமுமே நல்லியல்பு கொண்ட தூய மற்றும் ஜமாஅத்திற்காக ரோஷம் கொண்டவர்கள் ஆவார்கள். எந்த பகுதியில் வசிக்கிறார்களோ இந்தபகுதிகூட இவர்களின் காரணமாகவே உருவானது. மேலும் இவர்கள் அங்கு தொழுகைக்கான ஒரு சென்டரையும் உருவாக்கியிருந்தார்கள். சந்தாக்களிலும் ஜமாஅத்தின் பிற திட்டங்களிலும் முந்திக்கொண்டு பங்கெடுத்து வந்தார்கள். எல்லா விதத்திலும் எல்லா ஜமாஅத்தோடும் எல்லா நேரத்திலும் ஜமாஅத்தோடு முழு ஒத்துழைப்பு வழங்குவதிலும் கட்டுப்படுவதிலும் முன்னிற்பார்கள். ஷஹீத் மர்ஹூமா பின் விட்டுச் சென்றவர்களில் மூன்று மகன்களும் இரு மகள்களும் உள்ளனர். ஒருமகன் இங்கு இருக்கிறார் முஹம்மது பூட்டா சாஹிப், இவர்களுடைய இரு மகள்களும் ஷஹீதாகினர். இவர்கள் பின்விட்டுச் சென்றவர்கள் அவர்களுடைய தாய், தந்தை மற்றும் ஒரு சகோதரர் அதாவுல் வாஸிஃ வயது 5, ஒரு சகோதரி ஸித்ரத்துன்னூர் வயது 3 ஆகியோர் உள்ளனர்.

இந்த பகுதியில் 18 வீடுகள் உள்ளன. இவர்கள் ஒருவருக்கொருவர் உறவினர்கள் ஆவர். எவ்வாறிருப்பினும் இப்போது ரப்வாவில் உள்ளனர். நான் கூறியது போன்று 6 வீடுகளை அதன் சாமான்கள் அடங்க எரித்துவிட்டனர். முஹம்மது ஃபஸ்ல் சாஹிப், அஷ்ரஃப் சாஹிப், பூட்டா சாஹிப், ஸலீம் சாஹிப், கலீல் சாஹிப், ஃபிரோஸ்தீன் சாஹிப் ஆகியோரின் வீடுகளாகும். இருவீடுகளை உடைத்துள்ளார்கள். அதன் சாமான்களை எடுத்து எரித்துள்ளார்கள். இது மாஸ்டர் பஷீர் சாஹிப் மற்றும் முபஷ்ஷிர் சாஹிப் அவர்களின் வீடுகளாகும். இது தவிர 5 அஹ்மதி சகோதரர்களின் கடைகளை முற்றிலுமாக சூரையாடிய பிறகு நெருப்புவைத்து விட்டார்கள். இதுபோன்று அந்த பகுதியின் தொழுகை சென்டரும் தாக்கப்பட்டது. அங்கிருந்த திருக்குர்ஆன் பிரதிகள், ஜமாஅத் புத்தகங்கள், மற்றபிற சாமான்களை எரித்தபிறகு தொழுகை சென்டருக்கும் நெருப்புவைத்து விட்டனர். இது இந்த அநியாயக்காரர்களின் நடைமுறை பற்றிய சுருக்கம் அல்லது நிலைமைகளாகும். இவர்களைப்பற்றித்தான் இவர்கள் பாவமன்னிப்பு கோரவில்லையென்றால் நரக தண்டனை மற்றும் எரிக்கக்கூடிய தண்டனை விதிக்கப்பட்டதாகும் என அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ் நிராகரிப்பவர்களின் தலைவர்களையும் விரைவில் பிடிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வானாக. மேலும் நெருப்பு வைப்பதில் முன்னின்றவர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டையும் செய்வானாக. அல்லாஹ் இந்த ஷஹீதுகளின் படித்தரங்களை உயர்த்துகின்றான். இவர்கள் பின் விட்டுச் சென்றவர்களுக்கு பொறுமை மற்றும் மனதைரியத்தையும் வழங்குவானாக. குறிப்பாக அப்பாவி குழந்தைகளையும் சகோதரிகளையும் பிரிந்த இந்த தாய் தந்தை மற்றும் சகோதர சகோதரிகளுக்கு பொறுமையையும் மனதைரியத்தையும் வழங்குவானாக. அல்லாஹ் இந்த அனைத்து காயமுற்றவர்களுக்கும் விரைவில் பரிபூரண நலத்தை வழங்குவானாக. மேலும் அவர்களின் பொருள் இழப்புகளை தனது அருளால் ஈடுசெய்வானாக. மேலும் முன்பைவிட அதிகமாக வழங்குவானாக.